**செய்தி வெளியீடு எண்:280** **நாள்:16.06.2021**

## செய்தி வெளியீடு

## பொதுப்பணித்துறையில் ரூ.320 கோடியில் புதிய கட்டடங்கள்

## துறை அலுவலர்களுடன் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் ஆய்வு

## அரசு மருத்துவமனைகளில் ஒரே மாதத்தில் போர்க்கால அடிப்படையில் 12000 ஆக்சிஜன் படுக்கை வசதிகளை ஏற்படுத்திய பொறியாளர்களுக்கு மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அறிவுரை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு அவர்கள் தலைமையில் இன்று **(16.6.2021)** சென்னை கிண்டியிலுள்ள நெடுஞ்சாலைத்துறை ஆராய்ச்சி மைய வளாகத்தில் பொதுப்பணித்துறை திட்டப்பணிகள் முன்னேற்றம் மற்றும் புதிய திட்டங்களை செயல்படுத்துதல் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு பொதுப்பணித்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர்.சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கூட்டத்தை துவக்கி வைத்து பேசும்போது குறிப்பிட்டதாவது,

### பொதுப்பணித் துறை

- தலைவர் கலைஞர் அவர்கள் **1967** முதல் **1969** வரை வகித்த பொதுப்பணி துறையின் பொறுப்பினை ஏற்று இருப்பது எனது பாக்கியமாக கருதுகிறேன்.

- அரசின் நிர்வாகப் பணிகள் அனைத்தும் துறைகள் மூலமாகத் தான் அரசு நிறைவேற்றுகிறது.

- தமிழக அரசில் 37 துறைகள் உள்ளன. சுகாதாரம், கல்வி, நெடுஞ்சாலை, மின்சாரம் போன்ற பல்வேறு துறைகளும் அத்துறை சம்பந்தமான பணிகளை மட்டுமே செயல்படுத்தும்.
- ஆனால், நிதித்துறை, பொதுப்பணித் துறை இரு துறைகளும் தான் அனைத்து துறைகளின் தேவைகளையும், பணி களையும் செய்கின்ற துறைகளாகும்.

- மக்களின் அன்றாட அத்தியாவசியமான தேவைகளை தனியாரால் நிறைவேற்ற இயலாது.

- சமுகத்திற்கு தேவையானவற்றை சேவையாக செய்வது தான் பொதுப்பணி ஆகும். மக்களின் தேவை நீர்பாசனம், சாலைகள், குடிநீர், மின்சாரம் போன்றவையாகும்.

- பொது மக்களுக்கு தேவையான பணிகளை சேவையாக செய்திட உருவாக்கப்பட்டது தான் பொதுப்பணித் துறையாகும்.

**<u>பொதுப்பணித் துறை வரலாறு</u>**

- பொதுப்பணித் துறைக்கென்று ஒரு வரலாறு உண்டு. 1852ல்,

    1. மராமத்து துறை
    2. மிலிட்டரி என்ஜினியரிங் துறை
    3. ட்ரங்க் ரோடு துறை என மூன்று அலகுகள் இருந்தன.

- 1858ம் ஆண்டு மூன்று அலகுகளையும் ஒருங்கிணைத்து பொதுப்பணித்துறை உருவாக்கப்பட்டது.

**<u>முத்திரைப் பதித்த தலைமைப் பொறியாளர்கள்</u>**

- காவிரியில் முக்கொம்பு, கீழ் அணை, அணைக்கட்டுகளை கட்டிய **<u>திரு.ஆர்தர் காட்டன்</u>** தான் இத்துறையின் முதல் தலைமைப் பொறியாளர்.

- சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம், உயர்நீதி மன்ற கட்டடம், முல்லை பெரியார் அணை அமைத்தவர் **திரு.பென்னி குயிக்.**

- மேட்டுர் அணை வடிவமைத்தவர் **திரு.கர்ணல் எல்லீஸ்.**

**பொதுப்பணித் துறை – வரலாற்று சிறப்புமிக்க கட்டடங்கள்**

1. 1864– மாநிலக் கல்லூரி
2. 1865– பொதுப்பணித் துறை அலுவலகம்
3. 1865– சென்னை பல்கலைக் கழகம்
4. 1892–சென்னை உயர் நீதிமன்றம்
5. 1914– இராணி மேரி கல்லூரி
6. 1920– கிண்டி பொறியியல் கல்லூரி
7. மாவட்ட நீதிமன்றங்கள்
8. மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்
9. அண்ணா நினைவு சதுக்கம்.
10. 2010ல் தலைவர் கலைஞர் அவர்கள் கட்டிய தலைமைச் செயலகம் (13.3.2010)
11. அண்ணா நூற்றாண்டு நூலகம் (15.9.2010)

**<u>புதிய துறைகள்</u>**

- பொதுப்பணித் துறையில் இருந்து நிர்வாக வசதிக்காக புதிய துறைகள் உருவாக்கப் பட்டன.

    1934– மின்சாரத்துறை
    1946– நெடுஞ்சாலை

1967– தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்
1970– குடிசை மாற்று வாரியம்
1971– குடிநீர்வடிகால் வாரியம்

- 2011ல் பொதுப்பணித் துறையின் கட்டட பிரிவில் பணிச் சுமை அதிகமான காரணத்தால் மூன்று மண்டலங்களாக பிரித்து, மூன்று தலைமைப் பொறியாளர்களை நியமித்தது தலைவர் கலைஞர் அவர்கள் தான்.
- 2021– நீர்வளத்துறை(முதல்வர் தளபதி) உருவாக்கினார்.

இக்கூட்டத்தில் மருத்துவமனைகளுக்குத் தேவையான அடிப்படை கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகள், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கான கட்டடங்கள், புதிய மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலங்களுக்கான கட்டடங்கள் மற்றும் மணிமண்டபங்கள் மற்றும் நினைவிடங்களுக்கான கட்டுமானப் பணிகள் ஆகியவை குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது.

அனைத்து மருத்துவமனைகளிலும் கொரோனா வார்டுகளுக்கு தேவையான கழிப்பறை வசதிகள், ஆக்சிஜன் இணைப்புக் குழாய்களுக்கான பணிகள், மின் விசிறிகள், மின் விளக்குகள் போன்ற பல்வேறு பணிகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். குறிப்பாக இவ்வரசு பதவியேற்றதிலிருந்து, கொரானா பெருந்தொற்றின் இரண்டாம் அலையை எதிர்கொள்ளும்பொருட்டு தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள் மற்றும் தாலுகா அளவிலான அரசு பொது மருத்துவமனைகளில் மக்களின் சிகிச்சைக்காக போர்க்கால அடிப்படையில் கூடுதல் ஆக்சிஜன் இணைப்புகளுடன் கூடிய 11,993 ஆக்சிஜன் இணைப்புகளுடன் படுக்கை வசதிகளை ஏற்படுத்தி நோயாளிகளின் பயன்பாட்டிற்கு வழங்கிய அனைத்து பொறியாளர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள்.

தொடர்ந்து ஆய்வின்போது, 11 இடங்களில் கட்டப்பட்டுவரும் புதிய அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனைகள் ஆகியவற்றின் கட்டடப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார். மேலும், விரைவாக கட்டுமானப் பணிகளை முடித்து நடப்பாண்டில் மாணவர்களை சேர்ப்பதற்கு வசதியாக விரைவில் இவ்வாண்டு இறுதிக்குள் கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்களுக்கான மாவட்ட ஆட்சித் தலைவர்

அலுவலக கட்டடங்கள் கட்டும் பணிகளையும், பல்வேறு அரசு துறைகளுக்கு கட்டப்பட்டு வரும் கட்டடப்பணிகள் குறித்தும் ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட, சென்னையில் ரூபாய் 250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை, சங்கத்தமிழ் வளர்த்த மதுரையில் ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் கலைஞர் நினைவு நூலகம், திரு கி. ராஜநாராயணன் அவர்களுக்கு கோவில்பட்டியில் கட்டப்படவுள்ள நூலகத்துடன் கூடிய மணிமண்டபம் ஆகியவை குறித்து ஆய்வு செய்தார். இத்திட்டங்களுக்கான மதிப்பீடுகள் வரைபடம் ஆகியவற்றை விரைவாக இறுதி செய்து சமர்ப்பிக்குமாறு அமைச்சர் உத்தரவிட்டார்.

அனைத்து கட்டுமானப்பணிகளும் நல்ல தரத்துடன், உறுதியுடனும் கட்டப்பட வேண்டும் என்றும், கட்டிடத்தின் தரத்திற்கு எந்தவிதமான குந்தகம் இல்லாமல் கட்டடிம் கட்டப்பட வேண்டும் என்றும், கட்டடம் நல்ல தரத்துடனும், உறுதியுடனும் கட்டப்படவேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். மேலும், கட்டடம் கட்டும்போது, தரக்கட்டுப்பாட்டிற்கு தேவையான சிமெண்ட், இரும்புக்கம்பி, மணல், செங்கல் போன்ற கட்டுமானப் பொருட்களுக்கு உரிய அனைத்து தரப்பரிசோதனை அறிக்கைகளும் கட்டயாமாக பணி நடைபெறும் இடங்களில் வைக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை சிறப்புச் செயலாளர் திரு. கு. அசோகன், முதன்மை தலைமைப் பொறியாளர் திரு.இரா.விஸ்வாநாத், திருச்சி மண்டல தலைமைப் பொறியாளர் திரு.இரவிச்சந்திரன், மதுரை மண்டல தலைமைப் பொறியாளர் திரு.ரகுநாதன் மற்றும் கண்காணிப்புப் பொறியாளர்கள், செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**